| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு.இரா.செல்வராஜ்,இ.ஆ.ப,<br>இயக்குநர்,<br>நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்,<br>சர்வே ஹவுஸ், சேப்பாக்கம்,<br>சென்னை-5. | 1. அனைத்து உதவி இயக்குநர்கள்,<br>நில அளவை பதிவேடுகள் துறை. |

**ந.க.ண5/27693/2019 (நி.அ) நாள்: 22.08.19**

ஐயா,

பொருள்: நில அளவை - பொது மக்களுக்கு அத்து அளந்து காட்டும் போது புலப்படச் சான்று வழங்குவது - தொடர்பாக

பார்வை: சென்னை-5, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்: 21.08.2019

*****

பொதுமக்களிடமிருந்து அத்து அளந்து காட்ட கோரும் மனுக்களின் பேரில், கிராம புலப்படசுவடியில் உள்ள அளவுகளின்படி மனுதாரருக்கு அளந்து காட்டப்பட்டு, மனுதாரரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அம்மனு முடிவு செய்யப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களின் பேரில் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு, மனுதாரருக்கு இன்றைய நிலையில் புலப்பட நகல் வழங்குவதில்லை. பொது மக்கள் தங்களின் அன்றாட அத்தியவாசிய தேவைகளுக்காக வட்ட அலுவலகம் சென்று புலப்பட நகல் பெற கால தாமதம் ஏற்படும் நிலை உள்ளது. எனவே, பொது மக்கள் நலன் கருதி அவர்களுக்கு உடனடியாக புலப்பட நகல் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. இனி வரும் காலங்களில் பொது மக்களிடமிருந்து அளந்து அத்து காட்ட கோரும் மனுக்கள் பெறப்படும் நேர்வுகளில் அளந்து அத்து காட்டிய பின் சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு சம்மந்தப்பட்ட புலஎண்ணுக்கு புலப்பட நகல் தயாரித்து, அதில் அளந்து அத்து காட்டிய அலுவலர் (**நில அளவர் / குறுவட்ட அளவர்/ சார் ஆய்வாளர் /துணை ஆய்வாளர் / ஆய்வாளர்**) நிலையில்,

சான்றொப்பத்துடன் கூடிய புலப்பட நகலினை உடனடியாக வழங்கிட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து உதவி இயக்குநர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இந்த சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்

நகல்:

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
2. மண்டல துணை இயக்குநர்கள்,
   நில அளவை பதிவேடுகள் துறை,
   சென்னை, மதுரை, திருச்சி, கோவை.
3. இணை இயக்குநர்,
   மத்திய நில அளவை அலுவலகம்,
   சென்னை-5.

ஒம்/-இரா.செல்வராஜ்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட
இயக்குநர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/8/19

கூடுதல் இயக்குநர்

22/8/19